# தொல்காப்பியம் – கலித்தொகை சுட்டும் அறவியல் செய்திகள்

முனைவர் திருமதி பி. பன்னீர்செல்வம்
உதவியாளர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மாவட்ட ஆட்சியரகம், விருதுநகர் – 626 002.

61

**முன்னுரை**

மனிதனின் நடத்தை பற்றிய ஆய்வைத் தமக்குரிய பணியாக அமைத்துக் கொண்ட பிரிவுக்கு அறஇயல் (Ethics) என்பது பெயர். மனிதனுடைய "அறிவு, விருப்பம், நடத்தையைச் செம்மை செய்து வளமைப்படுத்தும் துறையே – அறவியல் துறை ஆகும்,"1 அக இலக்கியத்திற்கு அறநெறிகள் அடிப்படை வாழ்வியல் நெறியைத் தந்திருக்கின்றன. அறவியலின் தொடக்கத்தை இனங்காணும் வகையில் தொல்காப்பியர் தமிழர்கள் காலந்தோறும் பின்பற்றி வந்த அறம், நிலையாமை, வாய்மை, வாகை, புகழ் போன்ற மனித இன நலச் செய்திகளையும் கூறியிருப்பது திறனாய்வுக்கு உரிய ஒன்றாகும். அறிவியலின் அடிப்படையில் இலக்கியங்களை மதிப்பிடுவதும், இலக்கியங்களிலுள்ள அறவியல் நெறியின் பண்புகளையும், ஆற்றல்களையும் காண்பது அறவியல் ஆய்வின் நோக்கமாகும்.

**அறவியலும் சமயமும்**

இறைவனை அடிப்படையாகக் கொண்டது சமயம். மனிதனை அடிப்படையாகக் கொண்டது அறம். சமயத்தில் ஈடுபாட்டுடன் விளங்கும் மனிதன் பொதுவாக அறத்தில் ஈடுபாட்டுடன் இருப்பதைக் காண முடியும். "அறம் சமுதாயத்தில் வாழும் மனிதனின் நடத்தையைப் பற்றிய கடமையை மட்டுமே ஏற்கிறது".2 அற வழிபாட்டில் செல்லும் ஒருவன் தான் செய்யும் கடமைகளுக்குத் தானே பொறுப்பு ஏற்பதையும், அவற்றின் தன்முனைப்பு நிற்பதையும் காணமுடியும். ஆனால் சமயக் கடமையைச் செய்பவன் தன்னை இறைவனின் கையில் இருக்கும் ஒரு கருவியாக எண்ணுகிறான். அறக்கடமைகளைப புரிவதற்கு 'அறிவு' ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. இறைவனை அறவியலில் ஒரு முன்னோட்டமாகக் கொள்வது சிறந்தது.

**இலக்கியமும் அறவியலும்**

மக்களை நெறிபிறழாமல் நடத்திச் செல்வதில் இலக்கயங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இலக்கியம் படைக்கப்படுவதே மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டுவதற்கும் அவனுடைய வாழ்வைச் செம்மைப்படுத்தி உயர்த்துவதற்கும் ஆகும், இறுதியாக இயலுமானால் அவன் ஆன்மீக விடுதலையைப் பெற உதவுவதற்கே எனும் கொள்கை அக்காலம் முதல் இக்காலம் வரையில் தமிழரிடமும், இந்திய மக்களிடமும் இருந்து வரும் உயர்ந்த குறிக்கோளாகும். இதனாலே இலக்கிய உலகில் 'அறவியல் காலம்' என்று ஒரு பிரிவு உள்ளது. மனிதன் அறநெறிக்கு உட்பட்டு இயங்கும் போதுதான் உலகியல் வாழ்வு துன்பமின்றி அமையும் என்பது அறநூல்களின் அடிப்படைக் கருத்து ஆகும். அவ்வகையில் மூதுரையும், நாலடியாரும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. அறம் என்பது வாழ்வின் பின்பகுதியினை எண்ணிச் செய்யப்பெறுவது

அன்று. “சான்றோர் சென்ற நெறி”3 என்று புறநானூறு சுட்டுகின்றது.

மக்களின் வாழ்வியல் பொருளாக விரிந்துகிடப்பவை அறநெறிகள். இவற்றை இணைத்து ஒருவகை வாழ்வியல் கொள்கை என வகுத்தும், தொகுத்தும் தந்தவர் வள்ளுவர். ‘அறம் பாடிய ஆசான்’ என்று சிறப்பாக அழைக்கப்படுகிறார். வள்ளுவர் அறம் குறித்துப் பேசுதலை,

“சிறப்புஈனும் செல்வமும் ஈனும்அறத்தின் ஊடங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு”4

என்ற குறளில் காணமுடிகின்றது. மணிமேகலையும் அறத்தின் சிறப்பை,

“அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது இல்”5

என்று புலப்படுத்துகின்றது. இத்தகைய இலக்கயங்கள் அறம் சார்ந்த செய்திகளை எடுத்தியம்பி மனித வாழ்விற்கு நன்மை செய்கின்றன.

**தொல்காப்பியம் சுட்டும் அறவியல்**

அறம், ஒழுக்கம் போன்ற சொற்களின் தோற்றம், பொருள்நிலை, வழங்கப்பெறும் முறை ஆகியவற்றைத் தெளிவாக ஆராய்ந்தால் தமிழர்களின் அறக்கொள்கையின் தொன்மை விளங்கும்.

தொல்காப்பியத்தில் நிலப்பிரிவைக் கூறத் தொடங்கும்போது ‘திணை’ என்ற சொல்லால் நிலப்பிரிவு குறிக்கப்பெறுகின்றது. இடமும் காலமும் இயங்கத் தொடங்கிய நிலையில் தனித்துக் கிடந்த நிலம், கருப்பொருள்களை உண்டாக்கும் ‘ஒழுக்கம்’ உடைய நிலம் உலகம் என்ற வளர்ச்சியைப் பெற்றது. இன்ன நிலத்தில் இதன் துணைகொண்டு இங்குள்ள மக்கள், இத்தகைய மனநிலையுடன் இணைந்த செயல்களை இயல்பாகவே செய்வார்கள் என நிலத்தையும் நிலத்தோடு வரையறை பெற்ற செயலையும் (அறச்செயலை) இணைத்து ‘உரிப்பொருள்’ என்ற தலைப்பில் விளக்குகின்றது தொல்காப்பியம். உரிப்பொருள் என்பது அந்தந்த மக்களின் ஒழுக்கத்தை வரையறை செய்து உரிமையாக்கப் பெற்ற பொருள் என்ற அடிப்படையில் அமைக்கப் பெற்றுள்ளது.

களவு வாழ்விலும், கற்பு வாழ்விலும் அன்பு இருந்த செயலை திணை ஒழுக்கமாக அமைவதை,

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்புடன் புணர்ந்த ஐந்திணை” (தொல். 1036)

என்ற தொல்காப்பிய வழி அறிய முடிகின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலப்பெயர்கள் ஒழுக்கத்தின் அடிப்படையில் அந்தந்த நிலத்து மக்கள் முதலிய கருப்பொருள்களின் வரையறை பெற்ற செயல் அடிப்படையில் ‘திணை’ என்ற சொல்லோடு இணைத்து வழங்கப்பெறுகின்றன. நால்வகை நிலங்களுக்கு நால்வகை ஒழுக்கங்களுக்கு ஏற்ற வகையில் பெயர்கள் அமைகின்றன. ஆயினும் நிலமே இல்லாத பாலை, ஒரு பொதுமை தழுவிய நடுவண் நிற்கும் பெருமையுடைய நால்வகை நிலத்து ஒழுக்கங்களையும், அந்தந்த இடங்களில் நிலைநிறுத்தும் ஆற்றல் வாய்ந்த பேரொழுக்கமாக அமைகின்றது.

மக்களினது வாழ்க்கையின் உறுதிப்பொருளாக அறம், பொருள், இன்பம் என்ற மூன்று

நிலைகளில் கொள்ளப் பெறுகின்றன. இம்மூன்றனுள் பொருளும், இன்பமும் அறத்தின் வழியில் இயங்குவன என்ற கருத்தைச்,

“சிறப்பிடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து

வழிப் படூஉம் தோற்றம் போல”6

என்ற புறநானூற்றுப் பாடல் விளக்குவதைக் காணமுடிகின்றது. இதனைத் திருவள்ளுவரும் அறன்வலியுறுத்தல் என்ற தலைப்பை அமைத்துச் சுட்டுகின்றார்.

அறத்தின் அடிப்படையிலேயே அகவொழுக்கமும் புறவொழுக்கமும் அமைகின்றன. அகம், புறம் என்ற இரண்டையும் ஒன்றி நின்று இயக்கும் அறம், அவ்விரண்டின் எல்லையைக் கடந்தும், உயர்ந்தும் விளக்கும் தன்மை உடையது என்பதை,

“ஒன்றே வேறே என்றிரு பால்வயின்

ஒன்றி உயர்ந்த பாலது ஆணை” (தொல். 1037)

என்று தொல்காப்பியம் வரையறை செய்கின்றது. மேலும் வாழ்க்கை எனும் நாணயத்தின் இருபுறமாகக் காதலும் வீரமும் அமைகின்றன. “பண்டைத் தமிழர் காதல் மரபுகள் எனும் அகத்திணை மரபுகளை அறிந்தோரால் தான் ‘பண்டைத் தமிழர்களின் வாழ்க்கை மரபுகள்’ எனும் புறத்திணை மரபுகளை நன்குணர முடியும்”7 என்று கூறுவர். அதனால்தான் புறத்திணையியலை,

“அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்

புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின்” (தொல். 1006)

என்று தொடங்குகின்றார் தொல்காப்பியர். இதனால் ‘அகம்’ அல்லது ‘இல்லறம்’ தமிழர் வாழ்க்கை மரபின் அடிப்படை என்றும், அந்த இல்லறம் எனும் அடித்தளத்தின் மேல் மக்களின் புறச்சூழல் வாழ்க்கை நிலைகளை வாகை, காஞ்சி, பாடாண் ஆகியவற்றின் பெரும்பான்மையான துறைகள் விளக்கிக் காட்டுகின்றன.

தொல்காப்பியம் – கலித்தொகையில் இடம்பெறும் அறவியல் செய்திகளைப் பின்வரும் தலைப்புகளின் கீழ் அறியமுடிகின்றது.

**‘அறம்’ – சொல் இடம்பெறும் இடங்கள்**

தொல்காப்பிய பொருளதிகாரம் மனித வாழ்வியலுக்குத் தேவையான அற ஒழுக்கங்கள் அனைத்தையும் எடுத்தியம்புகின்றது.

“அறம்புரி நெஞ்சமொடு .....” (தொல். 145; 21)

“அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்” (தொல். 190)

“அன்பே அறனே இன்பம் நாணொடு” (தொல். 211)

“அந்நிலை மருங்கின் அறமுதலாகிய

மும்முதற் பொருட்கும் உரிய என்ப” (தொல். 411)

மேற்கண்ட நூற்பாக்களில் இன்புறுத்தலும், உணர்த்தலும், இலக்கணத்தின் பண்பும் பயனுமாக இருத்தலை அறிய முடிகின்றது.

அறம் என்னும் சொல் நன்னெறியைக் குறித்து வழங்கியமையை,

"அறஞ்சாரான் மூப்பே போல்" (கலி. 38; 19)

"அஞ்சுவதஞ்சா அறனிலி" (கலி. 42; 26)

"அறனும் அது கண்டற்றாயின்" (கலி. 62; 16)

என்ற பாடலடிகள் வழி அறியலாகின்றது. பிற இலக்கயங்களிலும் இடம்பெறுதலை,

"அறனிலாளன் ,,,,,,,,,,,,"8

"உன்றனுக்கு ஒல்லும்நெறி அறம் உரைக்கேன்"9

என்ற பாடலடிகள் வழிக் காணமுடிகின்றது.

அறமானது தனிமனித அறம், குடும்ப அறம், சமுதாய அறம் என மூன்றாகப் பிரித்து ஆராயப்படுகின்றது.

**தனிமனித அறம்**

மக்களனைவரும் தத்தம் செயலில் சிறந்து நிற்கும் நிலையை வாகைத்திணை சொல்கிறது. பாலை எனும் அகத்திணைக்குப் புறமாக அமைவது வாகை. குற்றமற்ற கொள்கையுடைய மக்கட் பிரிவினர் தத்தமது கடமைகளின் சிறப்பினை வெளிப்படுத்தும் தன்மை உடையது என்பதை,

"வாகை தானே பாலையது புறனே
தரவில் கொள்கைத் தத்தம் கூற்றைப்
பாகுபட மிகுதிப்படுத்தல் என்ப" (தொல். 1020)

என்ற நூற்பா சுட்டுகின்றது. வாகைத்திணையின் வகைப்பாடு எனும் நூற்பாவில் ஈதல், படைவழங்குதல், குடிஓம்புதல், கேடில்லாத நற்செய்திகளை முக்காலமும் அறிந்து சொல்லும் கணியர்கள், வீரர்கள் திறம் என்பவை இடம்பெற்றுள்ளன. இதனை,

"அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறி மரபில் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையொடு ஆங்கெழு வகையால்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்" (தொல். 1021)

என்ற நூற்பா சித்திரிக்கின்றது.

வாகைத்திணையின் துறைகள் குறித்த நூற்பாவின் பின்பகுதியில் உள்ளவை அறத்தின் அடிப்படையில் பிறப்பன என்பதை,

"கூதிர் வேனில் என்றிரு பாசறைக்
கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்

இடையில் வண்புகழ்க் கொடையி னானும்
பிழைத்தோர்த் தாங்கும் காவ லானும்
பொருளொடு புணர்ந்த பக்கத் தானும்
அருளொடு புணர்ந்த அகற்சியானும்
காமம் நீத்த பாலினானு மென்று
இருபாற் பட்ட ஒன்பதின் துறைத்தே” (தொல். 1022)

என்ற நூற்பா விளக்குகின்றது. மேற்கண்ட நூற்பாவில், கட்டுப்பாடான ஒழுக்கங்களைக் கருதி மேற்கொண்ட திறமும், இடையறாத வளமிக்க புகழ்தரும் கொடைத்திறமும், தவறிழைத் தோரை அவர் தவறுணர்ந்த காலத்து அதை உணர்ந்து அவரைப் பாதுகாத்தலும், மெய்ப்பொருளை உணர்ந்து அதை விரும்பிய திறனும், யார்மாட்டும் அருளொடு கொண்ட பற்றற்ற நிலையும், வெல்லற்கரிய காமத்தை வென்று அதனைக் கைவிட்ட வாழ்க்கைப் பகுதி நிலையும் ஒன்றுசேர வாகைத் திணையானது தனிமனிதனுக்கு அறமாகக் கூறுகின்றது.

**அறன் வலியுறுத்தல்**

அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றிலும் அறமே முதன்மையானது என்று சங்ககால மக்கள் நம்பினர். ஆகையால் ஒருவன் வாழ்க்கையில் அறம் செய்தால் அது இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தரும். அதனால் தம் வாழ்நாள் கழியும் முன்னரே அறம் செய்ய வேண்டும் என்பதை,

“அருள் தீர்ந்த காட்சியான் அறநோக்கான் நயஞ்செய்யான்
வெருவுற உய்த்தவன் நெஞ்சம் போற் பைபய
இருள் தூர்பு” (கலி. 120; 1-3)

என்ற அடிகள் வலியுறுத்துகின்றன. பிறர்க்கு உதவி செய்யாதவருடைய செல்வம் அவர்க்குப் பயன்படாது என்பதை,

“…………….. பிறர்க்கு உதவி
செய்யாக் கருங்கடல் நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு”10

என நன்னெறி காட்டுகின்றது.

**குடும்ப தலைவனின் அறம்**

ஈகைச் சிறப்பே ஒருவனுக்குப் புகழைக் கொடுக்கும். தனிமனிதனாக இருந்தாலும், நாட்டின் தலைவனாக இருந்த போதிலும் தன்னை நாடி வந்தோர்க்குப் பொருள் கொடுத்தல் சிறந்த அறமாகும். தலைவனது இயல்பைக் கூறும்போது, பகைவரை வென்று களம் கொள்ளும் வீரன், நடுநிலையோடு முறைசெய்வதில் வல்லவன், வேண்டியோர்க்கு வேண்டியன கொடுக்கும் அருளாளன் என்ற பண்புகள் தலைவி கூற்று வாயிலாகச் சித்திரிக்கப்படுகின்றது. தொல்காப்பியர் சுட்டும் அறிவு, ஆற்றல், அருள், முறைசெய்தல், ஆண்மை, கொடை என்ற பண்புகள் கொண்டவன் தலைவன் என்பதை,

“செம்மால் வனப்பெல்லாம் நுந்தையை யொப்பினும் நுந்தை

நிலைப்பாலுள் ஒத்த குறியென் வாய்க் கேட்டொத்தி
கன்றிய தெவ்வர்க் கடந்து களங்கொள்ளும்
வென்றி மாட்டொத்தி பெருமமற் றொவ்வாதி
பால்கொள லின்றிப் பகல்போல் முறைக்கொல்கா
கோல் செம்மை யொத்தி பெருமற் றொவ்வாதி" (கலி, 86;1-18)

என்ற பாடலடிகள் வழி அறிய முடிகின்றது. தலைவனது பண்புகளைத் தன் குழவியிடம் தாய் கூறுவது போல் அமைந்துள்ளது. இருப்பினும்,

"தந்தைய ரொப்பர் மக்களென் பதனா
லந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்" (தொல். 147)

என்ற நூற்பாவிற்கு ஒப்ப குழந்தையின் குணத்தைத் தலைவன் குணத்திற்கு ஒப்புமைகாட்டி ஊடல் தீர்க்கின்றாள். இங்கு, தலைவனது அறம் மறைபொருளாக இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

'தன்கையே தனக்குதவியாகக் கொண்டு வாழவேண்டும்' என்ற அறச்செய்தி தனிமனிதனுக்குப் பயன்படுதலை,

"ஆர்வுற்றார் நெஞ்சம் அழிய விடுவானோ
ஓர்வுற் றொருதிறம் ஒல்காத நேர் கோல்
அறம்புரி நெஞ்சத் தவன்" (கலி. 423; 13-15)

என்ற பாடலடிகள் சுட்டிநிற்கின்றன. தலைவியது நெஞ்சம் கலங்கும்படியாகத் தலைவன் விடான் என்பது 'களவு' வாழ்க்கைக்குரிய 'அறம்' ஆகும்.

**ஈதல் அறம்**

ஈதல் அறமானது மன்னனுக்கும் உரியது. தனிமனிதனுக்கும் உரியது. தகுதியைப் பொறுத்து ஒருவன் செய்யும் ஈகையின் அளவு மாறுபடுகின்றது. பிறருக்குப் பொருளைக் கொடுக்கவேண்டும் என்று நினைத்தால் உடனே கொடுத்துவிட வேண்டும், இல்லையேல் அது ஈகைச்சிறப்புக்கு இழிவைத் தரும். இதனை,

"இல்லோன் புன்கண் ஈகையின் தணிக்க
வல்லான் போல்வதோர் வன்மையுடையன்" (கலி. 473; 5-7)

என்ற அடிகள் சுட்டுகின்றன. இதில் தலைவனது கொடைப் பண்பினை அறிய முடிகின்றது. தலைவன் வறியோர்களின் வறுமையைக் கொடையினால் போக்க வல்லவன். ஈகை வாழ்க்கையே மெய்யான வாழ்க்கை என்று புறநானூறு சுட்டுதலை,

"பனித்துறைப் பகன்றை நறைகொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க் கொன்
றீயாது வீயு முயல்தவப் பலவே" (புறம், 235)

என்ற அடிகளில் காணமுடிகின்றது. பிறருக்கு ஈயாது வாழ்ந்து மாய்வோரின் இறப்பானது உதிர்ந்து வாழும் பகன்றை மலர்களைப் போன்றது என்ற செய்தி இதில் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றது.

**அரசியலறம்**

மன்னன் ‘அரசியலறம்’ தெரிந்தவனாக இருத்தல் வேண்டும். கலிப்பாடல்களில் மன்னர் குறித்த செய்திகள் நேரடியாக இடம் பெறாது, உவமைகள வாயிலாகத் தெளிவுறுத்தப் பெறுகின்றன. மன்னர்கள் வீரததை உயிராகக் கருதினர். இதனை,

“வேந்தன் செம்மையால் மாரி சுரக்கும்” (கலி. 99)

என்ற அடியில் வெண்கொற்றக் குடை அறனிழலாக வந்தது. மேலும் செங்கோல் பொய்யாது ஆட்சி செய்தால் மழைபெய்யும் என்ற செய்தி இடம்பெற்றுள்ளது. மன்னனது முரசம் பாதுகாப்பை ஒலிக்கும். போர்க்களத்தில் வீழ்ந்தவன் மேல் செல்வது வீரமன்று என்பதையும் சுட்டுகின்றது. இன்னும் அரசனின் செங்கோல் திறத்தை,

“குழவியைப் பார்த்துறூஉந் தாய்போ லுலகத்து
மழைசுரந் தளித்தோம்பு நல்லூழி யாவர்க்கும்
பிழையாது வருதனின் செம்மையில் தரவாய்ந்த
இழையணி கொடித்திண்தே ரினமணி யானையாய்”

(கலி. 99; 4-7)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

மன்னன் மக்களின் நிலையறிந்து வரிவசூல் செய்ய வேண்டும் என்பதைப் புலவர்கள் தங்கள் பாடல்களில் ‘செவியறிவுறூஉ’ என்னும் துறையில் பாடியுள்ளனர். புறாநானூற்றுப் பாடலடிகளில் மன்னன் எவ்வாறு ஆட்சி செய்ய வேண்டும் என்ற இலக்கணம் இடம்பெறுதலைக் காணமுடிகின்றது. இதே செய்தி குறளில் இடம் பெறுதலை,

“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்” (குறள். 388)

என்ற குறளடிகள் வழி அறியலாகின்றது.

மன்னனது அரசாட்சி பற்றிக் கூறிய புலவர், கொடுங்கோல் மன்னன் குறித்த செய்தியையும், பாலைப்பாடல்களில் பதிவு செய்துள்ளார். இதனை,

“நடுகவிந் தொரீஇ நயனில்லான் வினைவாங்கக்
கொடிதோர்த்த மன்னவன் கோல் போல” (கலி. 8; 1-2)

“கொலை யஞ்சா வினைவராற் கோல் கோடி யவனிழ
லுலகுபோல லுலறிய வுயர்மர வெஞ்சுரம்” (கலி. 10; 6-7)

“முறை தளர்ந்த மன்னவன் கீழ்க் குடிபோலக் கலங்குபு”

(கலி. 34; 13)

என்ற அடிகளில் நீதி தவறி வாழும் அரசன் குறித்த செய்திகள் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. அறநெறியில் உலகை நிலை நிறுத்த முடியாத வலிமையற்ற மன்னனது காலம் போல மயங்கிய இருள் தோன்றியது என்பதை,

“நல்லற நெறிநிறிஇ யுலகாண்ட அரசன்பின்

அல்லது மலைந்திருந் தறநெறி நிறுக்கல்லா

மெல்லியான் பருவம்போல் மயங்கிருள் தலைவர”

(கலி. 129; 4-6)

என்ற பாடலடிகள் சித்திரிக்கின்றன. வருத்தமுற்று குடிகள் ஓலமிட, கொலைத் தொழிலுக்கும் அஞ்சாத அரசு வினைஞர்களால் நெறியின்றிப் பொருளைப் பெற்றுச் செங்கோல் வளைந்து ஆட்சி நடத்துபவனுடைய அறமானது அவனையே அழித்துவிடும்.

நெய்தற்கலியில் நல்லந்துவனார் செங்கோல் மன்னனது அறத்தைச் சுட்டுகிறார். ஒழுக்கத்தால் விளங்கிய வெற்றி வாய்ந்த புகழை உடைய மன்னர் உயிர்களைக் காத்து உறங்கச் சென்றது போல 'பல்கதிர் ஞாயிறு பகலை ஆற்றி மலையைச் சேர்ந்தது' என்கிறார்.

**அமைச்சனின் அறமற்றநிலை**

மன்னனுக்கு ஆலோசனைகள் கூறவும், அதனை நடைமுறைப் படுத்தவும் அமைச்சர்கள் இருந்தனர். தீமையான எண்ணம் கொண்ட அமைச்சர்களின் நிலையைக் கலித்தொகை சுட்டுதலை,

“பேதையோன் வினைவாங்கப் பீடிலா அரசானாட்டு

ஏதிலான் படைபோல இறுத்தந்தது இளவேனில்” (கலி. 27; 7-8)

என்ற பாடலடிகள்வழி அறியமுடிகின்றது. அரசனுக்கும் ஆட்சிக்கும் கெடுதல் விளைவிக்கும் அமைச்சரை வள்ளுவர்,

“பழுதுஎண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்

எழுபது கோடி உறும்” (குறள். 110)

என்ற குறளில் சுட்டுகின்றார்.

தீயோரின் அறமற்ற நிலை

நன்மையான செயல்புரிபவர்களை மட்டும் பேசாது தீயோரினது செயல்கள் குறித்தும் கலித்தொகைப் பாடல்கள் இயம்புகின்றன. நன்மை தீமையை ஆராயும் 'அவையானது' இருந்துள்ளது. மக்களது குறைகள் 'அவையில்' ஆராயப்பட்டதையும் சங்கநூல்கள் இயம்பு கின்றன. அறனறிந்து நடக்கும் கண்ணோட்டம் உடையவனை அவை ஏற்கும். அறம் அல்லாதோர் கருத்து 'அவையில்' மறைந்து விடும். இதனை,

“அறன் அறிந்து ஒழுகும் அங்கணாளனைத்

திறன் இலார் எடுத்த தீமொழி எல்லாம்

நல்அவையுள் படக் கொட்டாங்கு” (கலி. 144; 70-73)

என்ற அடிகள் சுட்டுகின்றன. மேலும் இது அவையோரின் உயர்ந்த மனத்தினையும், தீயோரினது செயலையும் குறிப்பிடுகின்றது. நல்லவையோர் இருக்குமிடத்தில் அறிவற்றோர் பேசுவது நகைப்பிற்கு இடமாதலை,

“நல்லவையுள் புக்கிருந்து நாவடங்கக் – கல்வி

அளவிறந்து மிக்கார் அறிவு எள்ளிக்கூறல்

மிளகு உரு உண்பான் புதல்” (அகம். 71)

என்ற பாடலடிகள் வழி அறியலாகின்றது. கலித்தொகையும் செயலை விளக்குகின்றது. இதனை,

"ஆறல்ல மொழிதோற்றி யறவினை கலக்கய" (கலி. 147; 1)

என்ற பாடலடிவழி அறியமுடிகின்றது.

குடும்ப அறம்

தலைவன், தலைவி இருவரும் குடும்ப அறம் பேணுபவராகக் காட்டப்படுகின்றனர். களவு, கற்பு இரண்டிலும் குடும்ப அறம் போற்றப்படுகின்றது. களவிற்சிறந்த தலைமகனை வழிபட்டுத் தலைமகள் செல்லுவது அறந்தலைப் பிரியாத செயல் ஆகும். மேலும்,

"ஒரோ ஒகை தம்முட் டழீஇ யொரோஒகை
ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்
ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்க யரிதரோ
சென்ற யிளமை தரற்கு" (கலி. 18; 9-12)

என்ற அடிகளில் அன்பின் பிணைப்பு சிறப்பாக இடம்பெற்றுள்ளதை அறிய முடிகின்றது. பெண்கள் தன் கணவனுக்கு ஏற்படும் துன்பத்தை, தன்னுடைய துன்பமாக ஏற்று வாழும் நிலையை,

"அன்பறச் சூழாதே யாற்றிடை நும்மொடு
துன்பந் துணையாக நாடினது வல்லது
இன்பமு முண்டோ வெமக்கு" (கலி. 6; 9-11)

என்ற பாடலடிகள் சித்திரிக்கின்றன.

விருந்தோம்பலும், குழந்தைப்பேறும், பிறர்க்குப் பொருள் கொடுத்தலும் இல்லற வாழ்வில் இணைந்துவாழும் கணவன், மனைவியரது தலையாய கடமையாக உள்ளது.

"தொலைவாகி யிரந்தோர்க் கொன்றியாமை யிளிவென"

(கலி. 2; 11)

என்ற பாடலடியில் பிறருக்குப் பொருள் கொடுத்து உதவுதல் இல்வாழ்க்கை அறம் என்பது விளக்கப்பட்டுள்ளது. தம்மிடம் இருந்த பொருள் எல்லாம் தொலைந்த பின்னர், இன்மை காரணமாகப் பிறர்க்குப் பொருள்தர வேண்டிப் பொருள்தேடிச் செல்லும் பிரிவு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

பறவை, விலங்குகளின் வாழ்வை விளக்குவதன் மூலம் இல்லறத்தின் சிறப்பு விளக்கப்படுகின்றது. பாலைநிலத்தின் வெம்மையைத் தன் பெடைக்கு ஏற்படாது தவிர்த்தலை,

"அன்பு கொண் மடப்பெடை யசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே"

(கலி. 11; 11-12)

மேலும்,

"துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியுட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே"

(கலி. 11; 8-9)

என்ற பாடலடிகள் சுட்டுகின்றன. குடும்ப உறவுகள் ஒன்றுக்கொன்று பாதுகாப்போடு வாழ்தலை இதன்வழி அறியமுடிகின்றது. தலைவன் தன் மகனோடு இணைந்து உறங்குவதைக் கண்ட தலைவி ஊடல் தீர்தலை,

"புதல்வந் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும், ஆங்க,
விருந்தெதிர் கொள்ளவும் பொய்சூதுள் அஞ்சவும்
அரும் பெறற் புதல்வனை முயங்கக் காணவும்
ஆங்கவிந் தொழியுமென் புலவி தாங்கா" (கலி, 95)

என்ற பாடலடிகள் சித்திரிக்கின்றன.

மகளிர் அறம்

ஐந்து நிலங்களில் வாழும் மகளிர் அவரவர் நிலத்திற்கு ஏற்ற அக ஒழுக்கம் உடையவராக இருக்கின்றனர். குறிஞ்சி நிலப் பெண்கள் காதல் கொண்ட கணவனை மணத்தலே நிலையற்ற உலகில் நிலையான புகழைத்தரும் என நம்பினர். தலைமகனுக்காகத் தெய்வத்தை வணங்குதல், காமுறுதல், வாழ்த்தல் ஆகிய மூன்றினையும் முறையல்ல என்று நீக்கித் தலைமகள் வாழ்வாள். பிறருக்குக் கொடை செய்ய வேண்டித் தலைவன் அறவழியில் பொருள்தேடச் சென்றதால் அவனுக்குத் தீங்கு நேராதவாறு 'அறம்' உதவும் என்று நம்பினர். கற்புடைய மகளிரின் முயற்சிகளுக்கு அறம் துணையாகும். மகளிர் தம் கணவரைத் தொழுது வழிபடுதலால், மன்னனும் தன் கோல் பிழையாது ஆட்சிசெய்வான் என்பர். குறமகளிர் தம் குடிக்கு வழுவாகாத கற்புக்கடம் பூண்ட வாழ்க்கை வாழ்ந்தனர் என்பதை,

"கடிமனை கரத்தோம்ப வல்லுவள் கொல்லோ" (கலி. 24; 9)

என்ற பாடலடி சுட்டுகின்றது. மகளிர் நோன்பெடுத்து வீடுதோறும் சென்று ஐயம் ஏற்றும், அதனை இரந்தோர்க்கு ஈந்தும் சிறுசோறு சமைத்து ஆயத்தார்க்கு ஈந்தும் களிப்பர். மருதநிலத்தில் கற்றறிந்த சான்றோர் பலர் இருந்தமையால் அறம் சிறந்து விளங்கியமையை அறியமுடிகின்றது. 'அன்பும் அறிவும் இல்லா வாழ்வு வேண்டா' என வெறுக்குந் துணிவு மருதநிலத் தலைவிக்கு இருந்ததை,

"தருக்கேம் பெருமநின் அல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய் போல்வந்து தகவில செய்யாது
சூழ்ந்தவை செய்து மற்றெம்மையும் உள்ளுவாய்
வீழ்ந்தார் விருப்பற்றக் கால்" (கலி. 69; 21-23)

என்ற அடிகளில் தலைவியின் சொல்வன்மையினை அறிய முடிகின்றது.

சமுதாய அறம்

வெளிப்படையாகக் கூறாது கலிப்பாடல்களில் மறைமுகமாக அறச்செய்திகள் கூறப்பட்டுள்ளன. அறம் சிறந்து விளங்கும் தனிமனிதனும், குடும்பமும் இருந்தால் சமுதாயமானது 'அறம்' செறிந்ததாக இருக்கும்.

மனிதன் – மக்கள் - மன்னன் என்ற மூவரும் அறவாழ்க்கை நடத்தினால் சமுதாயம் நல்ல நெறியைக் கொண்டே இயங்கும். தாம் வளமாக வாழ்தலும், தம்மைத் தேடிவரும் கேளிரைத் தாங்கி நிற்றலும், இரந்தோர்க்கு இல்லையென்று சொல்லாது ஈதல் ஆகிய மூன்றும் உயிரினும் மேலானதாகக்

கருதப்படுகின்றது. செய்த வினைப்பயன் பற்றினை விடாது பயனைத் தரும் என்பது உண்மை. அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றில் அறத்தின் திறஞ்சேரார் காமத்தின் மிகுதியால் மடல் ஊர்வார்.

"ஈத லிரந்தார்க்கொன் றாற்றாது வாழ்தலின்
சாதலுங் கூடுமா மற்று;
இவள் தந்தை, காதலை யார்க்குங் கொடுக்கும் விழுப்பொருள்
யாது நீ வேண்டியது" (கலி. 61; 11-14)

என்ற பாடலடிகளில் குடும்பத்தலைவன் பிறர்க்கு பொருள் கொடுக்கும் நிலை காட்டப்படுகின்றது. சமுதாயத்தில் வாழும் மக்கள் பிறருக்கு உதவி செய்து வாழ்ந்த அறவாழ்வு இங்கே விளக்கப்படுவதை அறியமுடிகின்றது.

**அறவியலில் அறவுரைகள்**

அரிதாய அறனெய்தி அருளியோர்க்கு அளித்த வெற்றியும் பொருளும் வாய்க்க இன்பத்தைத் தரும். பாலைநிலம் தொடங்கி நெய்தல் நிலப்பாடல்கள் வரை அறச்செய்திகள் பல இடங்களில் விரவிக் காணப்படுகின்றன. இயற்கைக் காட்சிகளைக் கொண்டே அறக்கருத்துகளை விளக்கி வந்தனர் புலவர்கள். நெய்தற்கலியில் ஒரேயொரு அறக்கருத்து இடம்பெற்றுள்ளதை,

"ஆற்றுதல் என்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப்படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறைவெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்"

(கலி. 133; 6-14)

என்ற கலிப்பாடல் சுட்டுகின்றது. இதில் மனித சமூகமே திருந்தி வாழக்கூடிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

**தொகுப்புரை**

'அறம்' என்பது ஒவ்வோர் தனிமனிதனுடைய வாழ்விலும் முக்கியத்துவம் வாய்ந்தது. அவன் கூட்டாகச் சேர்ந்து வாழும்போது செய்யும் அறம் 'சமுதாய அறமாக' இடம்பெறுகின்றது. மன்னன், தலைவன் ஆகிய இருவரும் தம் வாழ்வில் செய்யும் அறங்களை வாகைத்திணை வாயிலாக அறியமுடிகின்றது. மேற்கண்ட அறக் கொள்கைகளைத் தொல்காப்பியமும் கலித்தொகையும் பதிவு செய்திருப்பதை இக்கட்டுரை சுட்டுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. வாழ்வியற் களஞ்சியம்-7, ப. 45.

2. மேலது, ப, 43.
3. புறநானூறு, ப. 230,
4. திருக்குறள், 31.
5. மணிமேகலை, 25; 228-230.
6. புறநானூறு, 200.
7. கி. இராசா, தொல்காப்பியம் பொருளதிகாரம், ப, 31.
8. அகம், 207,
9. மணிமேகலை, கா, 16.223.
10. புறம், 235.